**சொரணாதொட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியன்றும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொரணாதொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கு வைத்தல் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) போலியத்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கடன்கொடுத்தோருக்காக ரூபா 175,000 கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் கோவில கந்துர நீர் வழங்கல் திட்டத்தின் நீர்க் கட்டணங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 26,500 நீர்க் கட்டணம் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 778,723 தொகையான செலுத்த வேண்டிய கடன்தவணைப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 420,391 வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டில் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 434,000 பெறுமதியுடைய 225 கல்வனைஸ் கொடிக் கம்பங்கள் ரூபா 222,417 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 265,000 பெறுமதியான பல்நோக்கு நடமாடும் 10 கொட்டில்கள், 07 கொட்டில்கள் எனக் கருதப்பட்டு ரூபா 185,500 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மதிப்பீடு அங்கீகரிக்கப்படாத 07 தொழில்களிற்குரிய ரூபா 1,551,273 பெறுமதி தொழில் கடன்கொடுத்தோர் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் ஏலமிடப்பட்டிருந்த 06 அலுவலக உபகரணங்களின் ரூபா 37,050 பெறுமதி சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வின் பரிந்துரையின் மீது அலுவலகக் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 50,550 பெறுமதியான 09 பொருட்களின் பற்றாக்குறை கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,451,452 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,663,925 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 689,703,238 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) மற்றும் (ஓ) பிரிவு | அமைச்சரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பொருள் உதவிகளாக 7 சந்தர்ப்பங்களில் ரூபா 93,340 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் கோவை | |
| | 218 ஆம் விதி | 2016 ஆம் ஆண்டிற்காக காணி கட்டிடங்கள் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சநனாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நி.பி. 104 | 252-6370 ஆம் இலக்க கெப் வாகனத்திற்கு 2015 சனவரி 06 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பில் ஆரம்ப அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 371 | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,035,092 குறித்த நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| | (iii) நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 11,724 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பில் |

| | |
|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 571 | 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 90,692 தொகையான 16 வைப்பு மீதிகள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகள் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு ஊழியர் களிடமிருந்து ரூபா 18,230 கடன் மீதி நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,210 ஆகக் காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,704,357 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்புச் செயலாற்றல்

2016 சனவரி 01 ஆந் திகதி நிலவிய நிலுவை வருமானத்தை அறவிடுதல் மீதான செயன்முன்னேற்றம் 08 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,600,000 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

மாதாந்த அங்கீகரிக்கப்பட்ட நாட்களை விஞ்சி சபைச் செயலாளருக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கும் விடுமுறை தினக் கொடுப்பனவாக 11 சந்தர்ப்பங்களில் ரூபா 50,449 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

உரிய காலத்தில் வாகன அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக ஆண்டின் போது 05 வாகனங்களிற்காக ரூபா 11,690 தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடானது வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2016 ஆம் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) வருமானச் சேகரிப்பு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு